செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதைத்தான் நான் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரன் அவர்கள் கேட்டபோது சொன்னேன். விரைவிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை கலந்து, அதிகாரிகளுடன் மக்கள் பிரதிநிதிகளையும் சேர்த்து, அந்தக் குழுவை அமைத்து ஒரு நல்ல முடிவெடுக்கலாம். அப்போது நிச்சயமாக திருவண்ணாமலை பகுதியிலே அனைத்து வார்டுகளும் சரியான அளவோடு அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 92, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

92—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***3508—திரு. எஸ். சுதர்சனம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாதவரம் தொகுதி, சோழவரம் ஒன்றியம், பாடியநல்லூர் ஊராட்சி, 4–வது வார்டு, பரத் நகர் பிரதான தெருவில் ஆழ்துளைக் கிணறு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சோழவரம் ஊராட்சி ஒன்றியத்தில் பாடியநல்லூர் ஊராட்சியினுடைய மொத்த மக்கள் தொகை 23,819 ஆகும். அவ்வூராட்சியின் 4–வது வார்டு, பரத் நகரில் மொத்தம் 32 வீடுகள் உள்ளன. இந்த 32 வீடுகளுக்கு குடிநீர் வழங்குவதற்கு பரத் நகருக்கு அருகாமையில் உள்ள பாடியநல்லூர் காலனியிலுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து பரத் நகருக்கு நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 55 லிட்டர் என்கிற அளவில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனினும், வளர்ந்து வரும் மக்கள்தொகைப் பெருக்கத்தைக் கருத்தில்

2023 ஏப்ரல் 1]

கொண்டு, சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கையை ஏற்று, பரத் நகருக்கு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தரப்படும் என்கிற விவரத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மாதவரம் தொகுதியில் சென்னைக்கு குடிநீர் வழங்கும் புழல் ஏரியும், சோழவரம் ஏரியும் உள்ளன. திருவள்ளூர் மாவட்டம், என்னுடைய தொகுதியிலே, 32 ஊராட்சிகளும், 1 பேரூராட்சியும் உள்ளன. புழல் ஏரியில் 3.2 TMC குடிநீரும், சோழவரம் ஏரியில் சுமார் 1 TMC குடிநீரும் தேக்கி வைக்கக்கூடிய அளவிற்கு கொள்ளளவு உள்ளது. இரண்டு வருடங்களாக நம்முடைய தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய நல்லாட்சியின் காரணமாக எல்லா நீர்த்தேக்கங்களுமே நிரம்பி வழிந்து வருகின்றன. இருந்தாலும், புழல் ஏரி மற்றும் சோழவரம் ஏரியின் அருகிலே உள்ள ஊராட்சிகளில் வசிக்கின்ற மக்களுக்குக் குடிநீர் கிடைப்பதிலே சிக்கல் இருக்கின்றது. குடிநீர் முழுமையாகக் கிடைக்கவில்லையென்ற குறை இருக்கின்றது. அந்த மண்ணில் வசிக்கும் மக்களுக்கு. . .

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு என்ன செய்ய வேண்டும் என்று கேளுங்கள். என்ன வேண்டும் என்று கேளுங்கள்.

திரு. எஸ். சுதர்சனம்: பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது தெரிந்துதான் சொல்கிறேன். உங்களுக்கு என்ன வேண்டும்; என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள்.

திரு. எஸ். சுதர்சனம்: அது என்னவென்றால், நீர்த்தேக்கங்களில் உள்ள அந்தக் குடிநீரை அந்தப் பகுதியிலே வசிக்கின்ற மக்கள்கூட பயன்படுத்த முடியவில்லை. ஆகவே, CMDA–Chennai Metropolitan Development Authority, ஏற்கெனவே 1,189 ச.கி.மீ. ஆக இருந்ததை இப்போது ஐந்து மடங்கு

பெருக்கி, 5,904 ச.கி.மீ. ஆக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இது அரக்கோணம் வரை சென்றிருக்கின்றது. வருங்காலங்களில் அங்கே வசிக்கக்கூடிய மக்கள்தொகை நிச்சயமாகப் பெருகும். இதையெல்லாம் கருத்தில்கொண்டு, கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்று உருவாக்கித் தர வேண்டும். இது ஊரக வளர்ச்சித் துறையைச் சார்ந்தது என்றாலும் நீர்வளத் துறை சம்பந்தப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். சுதர்சனம், பக்கத்திலே உள்ள பூண்டி, புழல் போன்ற நீர்த்தேக்கங்களிலிருந்து பக்கத்தில் இருக்கிற உங்களுக்குத் தண்ணீர் வேண்டும்; தருவீர்களா என்று கேட்கிறீர்கள்.

திரு. எஸ். சுதர்சனம்: ஆம். அதற்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் இருந்தால்தான் அதைச் செயல்படுத்த முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கூட்டுக் குடிநீர்த் திட்டம் குறித்து கேட்க இன்னொரு கேள்வி இருக்கிறது. முதலில் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

திரு. எஸ். சுதர்சனம்: அதைச் செயல்படுத்த முடியுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: திருவள்ளூர் மாவட்ட அளவிலான பணிகள் குறித்து–திருவள்ளூர் மாவட்டத்தில் பல்வேறு திட்டங்களின் மூலமாக 1,069 குடிநீர்ப் பணிகள் ரூ.58 கோடி மதிப்பீட்டில் 2022–2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருவள்ளூர் மாவட்டத்தில் Jal Jeevan Mission திட்டத்தின் மூலமாக இதுவரை 4,15,571 எண்ணிக்கையிலான வீடுகளுக்குக் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அங்கு தண்ணீர் வசதி இல்லாத காரணத்தால் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நிச்சயம் Jal Jeevan Mission திட்டத்தின் மூலமாக, நம்முடைய குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக, எந்தெந்தக் கிராமங்களில் அந்தத் தண்ணீர் கொடுக்க முடியும் என்பதை ஆய்வு செய்து, அதற்கேற்ற ஒரு திட்டத்தை வகுத்து வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

2023 ஏப்ரல் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.*

திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையை சுற்றியுள்ள புழல் ஏரி, சோழவரம் ஏரி, செம்பரம்பாக்கம் ஏரி மற்றும் தேர்வாய் கண்டிகை கிராமத்திலுள்ள நீர்த்தேக்கங்களில் மொத்தமாக 13 TMC தண்ணீர் தேக்கி வைக்கப்படக்கூடிய நிலை உள்ளது. அதுமட்டுமல்ல, கிருஷ்ணா நதிநீர் மூலமாக ஆண்டுக்கு சராசரியாக 8 TMC நமக்குக் கிடைக்கிறது. அதேபோன்று கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தின் மூலமாக ஏறக்குறைய 2 TMC கிடைக்கிறது. இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, கடந்த நான்கு ஆண்டுகளாக தேர்வாயிலே தேக்கி வைக்கப்பட்டிருக்கின்ற 0.5 TMC தண்ணீரை இதுவரை குடிநீர் வாரியம் பயன்படுத்தவே இல்லை. அந்தக் குடிநீரையெல்லாம், பக்கத்தில் இருக்கின்ற கிராமங்களுக்கு வழங்க இதுபோல கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உருவாக்கித்தர வேண்டும். அதேபோன்று, கும்மிடிப்பூண்டி தொகுதி, பொன்னேரி தொகுதி, மாதவரம் தொகுதியிலுள்ள சராயகம் கிராமங்கள் உள்ளிட்ட கடற்கரை கிராமங்களிலெல்லாம் குடிநீர் குடிப்பதற்கு உகந்ததாக இல்லை. கடல்நீர் உள்ளே புகுந்ததால் நீரினைக் குடிக்க முடியவில்லை. இதே நிலை தொடர்ந்து வருவதனால், வளர்ந்து வருகின்ற புறநகர்ப் பகுதிக்கு முக்கியமாக ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிச்சயமாகத் தேவைப்படுகிறது. அதை நீர்வளத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி நிர்வாகத் துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து செய்து தருமா என்பதை உங்கள் மூலமாக நம்முடைய அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா துறைகளும் ஒன்றுதான். இப்போது அவர் கேட்கிறது—எந்த நீராதாரத்தைக் கொண்டு எந்தெந்தப் பகுதிகளுக்குத் தண்ணீர் வேண்டும் என்பதை அவர்கள் தெரிவித்தார்கள் என்றால், அதற்காகத் திட்டம் தீட்டப்பட்டு, நிச்சயம் வழங்குவதற்குரிய முயற்சிகள் எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.*

[2023 ஏப்ரல் 1

முற்பகல் 10–25

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதி, பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம், கிணத்துக்கடவு ஒன்றியம் என இந்த இரண்டு ஒன்றியங்களுக்குமாக சேர்ந்து, 2004 ஆம் ஆண்டிலிருந்து ஒரு குடிநீர்த் திட்டம் செயல்பட்டுக் கொண்டு வந்தது. இப்போது அனைத்துக் கிராமங்களுக்கும் தண்ணீர் சரியாகச் செல்வதில்லை என்பதற்காக மாண்புமிகு முன்னாள் முதல்வர் எடப்பாடியாருடைய ஆட்சியில் 71 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு இன்னும் சில பகுதிகளை இணைத்து திட்டம் மறுசீரமைப்பு செய்யப்பட்டது. ஆனால், மறுசீரமைப்பு செய்யப்பட்டதற்குப் பிறகும் சில கிராமங்களுக்குத் தண்ணீரே செல்வதில்லை. சில கிராமங்களுக்குத் தண்ணீர் 10 நாட்களுக்கு, 15 நாட்களுக்கு ஒரு முறைதான் சென்று கொண்டிருக்கிறது. கோடைக்காலம் தொடங்கிவிட்ட இந்தச் சூழ்நிலையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதில் தனிக் கவனம் செலுத்தி, அனைத்து கிராமங்களுக்கும் நல்ல முறையில் குடிதண்ணீர் செல்வதற்கு ஆவன செய்ய வேண்டும். 71 கோடி ரூபாய் செலவு செய்ததற்குப் பிறகும், முன்பிருந்ததைவிட கிராமங்களுக்கு தண்ணீர் செல்வது குறைந்துவிட்டது. வடசித்தூர், காபிளிபாளையம், காரச்சேரி, மெட்டுவாவி, அரசம்பாளையம் உள்ளிட்ட சில கிராமங்களுக்கு தண்ணீரே செல்வதில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கிராமப்புறத்திலிருந்து வந்தவர்கள். இதை மனதிலே வைத்து தயவுசெய்து தகுந்த விசாரணை செய்து, திட்டப் பணிகளை நல்ல முறையில் முடித்துவிட்டார்களா, இல்லையா என்பதை ஆய்வு செய்து, அனைத்துக் கிராமங்களுக்கும் நான்கு நாட்களுக்கொரு முறை, மூன்று நாட்களுக்கொரு முறை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தண்ணீர் சீராகச் செல்வதற்கு வாய்ப்பை உருவாக்கக் கேட்கிறீர்கள்.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: தண்ணீர் சீராகச் செல்வதற்கு ஆவன செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

2023 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு திட்டம் தீட்டப்பட்டு, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகப் பணிகள் எடுக்கப்பட்டு, பல்வேறு கிராமங்களுக்கு அந்தத் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டும் தண்ணீர் வரவில்லை என்ற கோரிக்கையைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். அவர்கள் சொன்ன கோரிக்கையின் அடிப்படையில், எந்தெந்த கிராமங்களுக்கு, என்ன காரணத்தினால் தண்ணீர் வழங்கப்படாமல் இருக்கின்றது என்பதைத் தெரிவிக்கும்பட்சத்தில், நான் அங்கே குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக அந்தத் திட்டத்தில் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதைப் பார்க்கிறேன். ஏனென்றால் குடிநீரைப் பொறுத்தவரையில், அனைத்துக் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களும், குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் மூலம்தான் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய கிராமங்களுக்கெல்லாம் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை உருவாக்கி, அவற்றில் கிராமங்களை இணைத்து, குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் தண்ணீர் வழங்குகின்ற பணி நடைபெற்று வருகிறது. உங்களுக்குத் தெரியாத விஷயம் இல்லை. நீங்கள் ஒரு மூத்த உறுப்பினர் ஆவீர். இப்போது, அதுசம்பந்தமாக, நீங்கள் சொல்லக்கூடிய கோரிக்கைகளில் ஏதாவது மாற்றம் இருந்தால் நானே நேரில் சென்று பார்த்து, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் தெரிவித்து, அந்தத் திட்டத்தில் வேறு ஏதாவது மாறுதல் செய்ய வேண்டுமென்றால் மாறுதல் செய்து தண்ணீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 93, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

93—

புதிய மாவட்டம்

***8942—திரு. சேவூர் S. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—